REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: ஆவணி 22உ புதன் (7—9—55) ★ ★ வெளியூர்: ஆவணி 23உ வியாழன் (8—9—55) [இதழ் 73

இந்திய சரித்திரத்திலேயே முதன் முறையாக டாக்டர்கள் வேலை நிறுத்தம்!

அகமதாபாத் டாக்டர்கள் வரும் 9-ந் தேதியன்று ஒருநாள் அடையாள வேலை நிறுத்தம் செய்ய முடிவு செய்திருக்கின்றனராம்.

வாடிலால் மருத்துவ மனை 'போர்டி'ன் 'நியாயமான-நேர்மையற்ற' முடிவினை எதிர்த்தே தாங்கள் இந்த வேலை நிறுத்த முடிவை மேற்கொண்டிருப்பதாகத் தெரிவித்திருக்கின்றனர். அகமதாபாத் மருத்துவக் கழகத்தினர் மூன்று மணி நேர விவாதத்திற்குப் பின் இந்த முடிவை மேற்கொண்டனர் என்று தெரிகிறது.

இந்தியாவின் சரித்திரத்திலேயே, 'டாக்டர்'கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது இதுதான் முதல் முறையாகும்!

ஐதராபாத் மாநிலம் துண்டாடப்படும்

'ஐக்கிய கர்நாடக', 'விசால ஆந்திர' மாநிலங்கள் பிறக்கும்?

மாநில புனரமைப்புக் குழு சிபாரிசுகள் பற்றி கோபால் ரெட்டி தரும் தகவல்

ஐதராபாத், செப். 6—

மாநில புனரமைப்புக் குழுவின் சிபாரிசுகளின்படி, இப்போதுள்ள ஐதராபாத் மாநிலம் மூன்று பகுதிகளாகத் துண்டாடப்படும் என்று தனக்குத் தகவல் கிடைத்திருப்பதாக ஆந்திர முதன் மந்திரி பி. கோபால ரெட்டி தெரிவித்திருக்கிறார்.

"ஐதராபாத்தில் உள்ள கர்நாடக மாவட்டங்கள் பிரிக்கப்பட்டு, ஒரு ஐக்கிய கர்நாடகம் உருவாகும்;

"ஐதராபாத்தில் உள்ள மகாராஷ்டிர மாவட்டங்கள் பிரிக்கப்பட்டு பம்பாயுடன் இணையப் பெறும்;

"எஞ்சியுள்ள தெலிங்கானா மாவட்டங்கள் ஐதராபாத்தைத் தலைநகராகக் கொண்டு, வரும் பொதுத் தேர்தல் வரையில் ஐதராபாத் மாநிலமாக இருக்கும்;

"அடுத்த பொதுத் தேர்தல், 'தெலுங்கர்களுக்கு இரு மாநிலங்களா, ஒரு மாநிலமா?—தெலிங்கானா தனி மாநிலமாகத்தான் இருக்க வேண்டுமா அல்லது ஆந்திரத்துடன் இணைய வேண்டுமா?'—என்ற அடிப்படையில் நடைபெறும்."

இவ்வாறெல்லாம், முதன் மந்திரி கோபாலர் தகவல் தந்திருக்கிறார்

மேலும், 'தெலுங்கர்களின் ஒருமுகமான எண்ணமெல்லாம், 'விசால ஆந்திரம்' அமைய வேண்டுமென்பதுதான் என்பதால், தெலிங்கானா ஆந்திரத்துடன்தான் இணையும்—இணைய வேண்டும்' என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

நிஜாம் கல்லூரியில், தெலுங்கு மாணவர் சங்கத்தைத் துவக்கி வைத்துப் பேசிய கோபாலர்

(4-ம் பக்கம் பார்க்க)

எதிர்பார்த்த ஏகாதிபத்தியப் போக்கு!

இந்தி மொழி கட்டாயமாக்கப்படுகிறது

மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கு உத்தரவு

மந்திரிகளின் உறுதிமொழி எங்கே?

மக்கள் சபையில் தென்னாட்டு உறுப்பினர் கண்டனம்

★

புதுடில்லி, செப். 6—

"இந்தி பரவுவதை தீவிரப்படுத்துவதற்காக, அவசியமானால், சர்க்கார் ஊழியர்கள் தங்கள் அலுவல் நேரத்தில் ஒரு மணி நேரம் இந்தி கற்குமாறு செய்ய வேண்டும்-என்று குடியரசுத் தலைவர் கூறிய யோசனை குறித்து, மத்திய சர்க்கார் உள்நாட்டிலாகா பரிசீலனை செய்துவருகிறது;

"மத்திய சர்க்கார் இலாகாக்களில் வேலை செய்யும் எல்லா ஊழியர்களும், வரும் 1956 ஜனவரி 26-ந் தேதிக்குள்ளாக இந்தி மொழியில் போதுமான அறிவு பெற்றுக்கொள்ள வேண்டும் என்று இந்திய சர்க்கார் உள்நாட்டிலாகா உத்தரவிட்டிருக்கிறது; இந்த உத்தரவு தபால்-தந்தி இலாகா ஊழியர்களுக்கும் பொருந்தும்; அந்த இலாகாவிற்கும் இந்த உத்தரவு அனுப்பப்பட்டிருக்கிறது."

—என்று, செய்திப் போக்குவரத்து இலாகா உதவி மந்திரி ராஜ்பகதூர் மக்கள் சபையில், தோழர் வீராசாமியின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

"'சென்னை மாநிலத்தில் இந்தியைக் கட்டாயமாகப் புகுத்த மாட்டோம்'—என்று பிரதம மந்திரியும், இதர மத்திய மந்திரிகளும், சென்னை மாநில மந்திரிகளும் உறுதி மொழி அளித்திருக்கின்றனர்; அப்படியிருக்க, 'சென்னை மாநிலத்தில் உள்ள தபால்-தந்தி இலாகா ஊழியர்கள் இந்தி மொழியை வரும் [illegible] குள் கற்றுக்கொள்ள [illegible] டும்,' என்று உ[illegible] கள்மீது இந்தியைத் திணிப்பதாகாதா?"

என்று, தோழர் வீராசாமி கேட்டிருக்கிறார்.

தலைவர் குறுக்கிட்டு, 'இது ஒரு கருத்து பற்றிய கேள்வியாக உள்ளது,' என்று கூறியிருக்கிறார்.

"இந்தி மொழி அறிவு பெறுவிட்டால், சென்னை மாநிலத்தில் உள்ள மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கு உத்தியோக உயர்வு கிடைப்பது பாதிக்காதா என்று நான் தெரிய விரும்புகிறேன்," என்று, அதே உறுப்பினர் மீண்டும் கேட்டார்.

"அறிவுரை பாணியில் உள்ள இந்த உத்தரவு, '1956 ஜனவரி 26-ந் தேதிக்குள், மத்திய சர்க்காரில் பணிபுரியும் எல்லா ஊழியர்களும் இந்தி மொழியினைக் கற்றுக்கொள்ள வேண்டும்,'—என்று கூறப்பட்டிருக்கிறது; ஏனெனில், இந்தி ஆட்சி மொழியாகும்போது, அதனை ஏற்றுக்கொள்ள அவர்கள் தயாராக இருக்க வேண்டுமென்பதற்காகத்தான்,"

என்று, கேள்விக்கு நேரடியான பதில் தராமல் மழுப்பியிருக்கிறார், உதவி மந்திரி ராஜ்பகதூர்!

திரு. அவினாசிலிங்கம் கேட்ட

(4-ம் பக்கம் பார்க்க.)

பாம்புக் கோயில் நிர்வாகி கொலை

பினாங்கிலுள்ள பிரபல பாம்புக் கோயிலின் நிர்வாகியான 64 வயதுள்ள புத்த பிட்சு, கொலை செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது; கொள்ளையடிக்கும் நோக்கமே கொலைக்குக் காரணமாக இருக்கக்கூடுமாம்.

3-இலட்சம் மக்கள் பரிதவிப்பு

400 கிராமங்கள் நீரில் மூழ்கின

ஒரிசா வெள்ளத்தில் 150 பேர் பலி

கட்டாக், செப். 6—

ஒரிசா மாநில கட்டாக் மாவட்டத்திலுள்ள மகாநதியில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கு, சுமார் 150 பேர்களை அடித்துக்கொண்டு போய்விட்டதாகத் தெரியவருகிறது.

400 கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கிவிட்டனவென்றும், சுமார் மூன்று இலட்சம் மக்கள் வீடிழந்து தவிக்கின்றனர் என்றும், 8,500 சதுரமைல் பரப்புள்ள நிலம் நீரில் மூழ்கியுள்ளது என்றும், வந்துகொண்டிருக்கிற சோகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

'வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவி செய்வதற்கு இராணுவம் தேவை' என்று ஒரிசா மாநில நிதி மந்திரியான நாதாராத் நாத் என்பார் தெரிவித்திருக்கிறார்.

வெள்ளப் பெருக்கில் மூழ்கியுள்ள கிராமங்களில், மரங்களிலும், கூரை மீதும் நின்றுகொண்டு தத்தளிக்கும் மக்களுக்குப் பாதுகாப்பும், உதவியும் புரிவதற்கான மீட்பு வேலைகள் விரைவாக மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

கடந்த ஒரு நூற்றாண்டில் எப்போதும் இல்லாத அளவு மகாநதியில் தண்ணீர் மட்டம் நேற்று 762 அடி இருந்தது எனக் கணக்கிடப்பட்டதாம். இப்போது நீர் மட்டம் இறங்கி வருவதாகவும் கூறப்படுகிறது.

கோவாவை விட முடியாதாம்

கவர்னர்-ஜெனரலின் கொக்கரிப்பு

பெல்கம், செப். 6—

"இப்போதைய நெருக்கடியான நிலையில், போர்ச்சுகல் நாட்டின் ஒரு பகுதியை கைவிட்டு விடுவதென்பது எண்ணிப் பார்க்கக்கூட இயலாதது,"

என்று, கோவா கவர்னர்-ஜெனரல் கொக்கரித்திருக்கிறாராம்!

இந்தியாவில் உள்ள போர்ச்சுகீசியப் பகுதிகளுக்கான புதிய அரசியல் விதிகளின்படி அமைக்கப்பட்டுள்ள 'சட்டசபை'யின் திறப்புக் கூட்டத்தில் பேசுகையில் கவர்னர்-ஜெனரல் கூறியதாவது:—

'போர்ச்சுகீசிய இந்தியர்கள் யாருடன் சேர்ந்து வாழப் போகிறார்கள் என்பதில் சந்தேகம் எதுவும் இல்லை; அவர்கள் இந்தியாவுடன் இணைவதினால் அவர்கள் அனுபவிக்கக்கூடிய கஷ்டங்கள் அவர்களுக்குத் தெரிந்ததே;

"கப்பல் கம்பெனிகளில் வேலை பெறுவதற்காக, கோவாக்காரர்கள் சிலர் தகுந்த தஸ்தாவேஜுகளுடன் பம்பாய் சென்றனர்; ஆனால், இந்திய எல்லைக்குள் நுழைய முடியாமல் திரும்பிவிட்டார்கள்; இந்தியாவில் உள்ளவர்களின் கஷ்டங்களைத் தெரிந்துகொள்ள இந்த சம்பவம் போதுமானதாகும்;

"போர்ச்சுகீசிய இந்தியாவில் எழுந்துள்ள கஷ்டங்களைச் சமாளிப்பதற்காக, தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுவோம்."

உத்திர பிரதேசத்தில் ரூ. 50 கோடிக்கு சேதம்

வெள்ளத்தால், உத்திர பிரதேசத்தில் சுமார் ரூ. 40 கோடி முதல் ரூ 50 கோடி வரையில் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது; 60 இலட்சம் ஏகர் நிலம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாம்.

நகரமே நிர்மூலமாகுமா?

சிந்து நதியின் வெள்ளப் பெருக்கின் விளைவாக, மேற்கு பாகிஸ்தான் ஐதராபாத் பகுதியிலுள்ள யேடியாரி நகரம் நிர்மூலமாகிவிடும் நிலைமையிலுள்ளதாம்; நகரைக் காப்பாற்றும் பணியில் ஈடுபட போலீஸ் பாதுகாவலுடன் சுமார் 500 கைதிகள் சென்றுள்ளனராம்.

மாஸ்டர் தாராசிங் விடுதலையானார்

அமிர்தசரஸ், செப் 6—

மொழிவழி மாநிலக் கோரிக்கைக்காக உரிமைக் குரல் எழுப்புவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை மீறியதற்காக நான்கு மாத சிறைத் தண்டனை அனுபவித்துவரும் சிரோமணி அகாலி தளத் தலைவர் மாஸ்டர் தாராசிங், 'இதுவரை அனுபவித்த சிறைவாசம் போதும்' என்று கூறி, அமிர்தசரஸ் நீதிபதி அவரை விடுவிக்குமாறு உத்தரவு பிறப்பித்திருக்கிறார் என்று தெரியவருகிறது.

வரி வசூல் இலாகா ஊழியர்களுக்கு சம்பளம் நிறுத்திவைப்பு!

மைசூர் நகர சபை ஒழுங்கு நடவடிக்கை

வீடு தறி, எண்ணெய் ஆலைகள் முதலியனவற்றிற்கு நகர சபை விதிக்கும் வரிகளை வசூலிப்பதில் மிகத் தாமதமாக நடந்துகொண்டதற்காக, சில வரி வசூல் இலாகா ஊழியர்களின் சம்பளங்களைப் பட்டுவாடா செய்யாமல் மைசூர் நகர சபை நிறுத்திவைத்திருக்கிறது.

இந்த ஊழியர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படுகிறது.

வரி விதிப்பு, வரி வசூல், இருப்பு ஆகியவை பற்றி நகர சபை நிர்வாக அதிகாரி கணக்குப் பார்த்தபோது, கடந்த மூன்றுமாத காலத்தில், வரி வசூல் மிகவும் மந்தமாக இருந்ததாக அறிவித்ததின் பேரில் நகர சபைத் தலைவர் வரி வசூலிப்பவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிட்டதையொட்டியே இந்த சம்பளப் பட்டுவாடா நிறுத்தப்பட்டிருப்பதாகத் தெரிகிறது

நகர சபை கூட்டத்தில், தலைவர், இந்தத் தகவலை வெளியிட்டார்.

சில உறுப்பினர்கள் இந்த ஊழியர்களுக்காகப் பரிந்து பேசினர் என்றும், அப்போது தலைவர், நிர்வாக விஷயத்தில் உறுப்பினர்கள் தலையிட வேண்டாமெனக் கேட்டுக்கொண்டதாகவும் தெரியவருகிறது

செப்டம்பர் 17–23: நாட்டுப் பிரிவினை வாரம்

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

சென்னை 7—9—'55 புதன்

வாக்குப் பதிவு!

கடந்த ஆண்டு சென்னை மாநிலமெங்கணும் மாவட்ட ஆட்சி மன்றங்களுக்கான தேர்தல் நடைபெற்றபோது, சர்க்கார், புதியதொரு வாக்குப் பதிவு முறையைப் புகுத்தினர்.

அந்தப் புதிய முறைப்படி, குறிப்பிட்ட ஒரு தொகுதியில் போட்டியிடும் அபேட்சகர்களின் சின்னங்களுக்காக தனித்தனிப் பெட்டிகள் வைப்பதற்கு மாருக, அபேட்சகர்களின் பெயர்களை அகர வரிசைப் படுத்தி, அதன்படி வாக்குச் சீட்டிலேயே அவர்களின் சின்னத்தைப் பொறித்தனர். வாக்காளர்கள், தாங்கள் வாக்களிக்க விரும்பும் அபேட்சகரின் சின்னத்திலோ, அல்லது தனியாகச் சின்னத்தின் அருகில் உள்ள கட்டத்திலோ ஒரு குறியிட்டு வாக்குச் சீட்டுகளுக்கென்றுள்ள ஒரே பெட்டிக்குள் தேர்தல் அதிகாரி முன்னிலையில் போட்டுவிட வேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டது.

பொதுவாக, தேர்தலைப் பற்றியும், தங்களின் வாக்குரிமையின் மதிப்பையும் தெளிவாகத் தெரிந்து கொள்ளும் நிலையில் இல்லாத பெரும்பாலான மக்கள், வாக்காளர்களாயிருக்கின்றனர்.

அந்த வாக்காளர் பெருமக்கள், தாங்கள் தேர்தல் காலத்தில் வாக்குரிமையைப் பயன்படுத்த வேண்டிய அவசியத்தைக்கூட இன்னும் முழுவதுமாக உணர்ந்துகொண்டவர்களாயிருக்கவில்லை.

இப்படிப்பட்ட வாக்காளர்களுக்காக நடைபெறும் தேர்தலில் அவர்கள் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் அவர்களால் சுலபமாகப் புரிந்துகொள்ளக் கூடியனவாக இருக்கவேண்டும். 'வாக்குப் பதிவு செய்வதில் அவர்களால், அவர்களது தேர்தலைப் பற்றிய உணர்வினால் தாங்கிக்கொள்ள முடியாத சிரமங்கள் வாக்குப் பதிவதில் இருக்குமானால், அவர்கள் வாக்குப் பதிவுச் சாவடியை எட்டியும் பார்க்க அஞ்சுவார்கள். எனவே, வாக்குச் சீட்டுகளில், தாங்கள் விரும்பும் அபேட்சகர்களின் சின்னத்தருகிலேயோ, அல்லது சின்னத்தின்மீதோ குறியிட வேண்டும் என்று இந்த நாட்டு வாக்காளர்களுக்கு இப்போதைய நிலையில், விதி வகுப்பது அவ்வளவு விரும்பத்தக்கதல்ல. அபேட்சகர்களின் சின்னங்கள் பொறிக்கப்பட்ட தனித்தனிவாக்குச்சீட்டுப்பெட்டிகளிருக்குமானால், அவற்றில் தங்கள் வாக்குச் சீட்டுகளைப் போடுவதைக் காட்டிலும், வாக்குச் சீட்டில் உள்ள சின்னங்களில் குறிபோடுவது என்பது வாக்காளர்களுக்குச் சிரமமானதாயிருக்கும் என்றும், அபேட்சகர்கள் இந்தப் புதிய முறையை வாக்காளர்களுக்கு விளக்கிச் சொல்லி அவர்கள் அதைப் புரிந்துகொள்ளுமாறு செய்வதும் மிகச் சிரமமாயிருக்கும் என்றும் புதிய முறை புகுத்தப்பட்ட சென்ற ஆண்டிலேயே பலராலும் சர்க்காருக்கு எடுத்துக் காட்டப்பட்டது.

எதிர்பார்த்தது போலவே, மாவட்ட ஆட்சி மன்றத் தேர்தல்களில் பதிவான வாக்குகளில் கணிசமான அளவு, வாக்காளர்களுக்குப் புதிய முறைப்படி வாக்குப் பதிவு செய்வதில் இருந்த சிரமத்தின் விளைவாக செல்லாத வாக்குகளாகக் கருதப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது.

இந்த 'அனுபவம்,' எதிர்காலத்தில் நடைபெறும் தேர்தல்கள் எப்படி நடத்தப்பட வேண்டும் என்பதை நிர்ணயிப்பதற்குப் பயன்பட வேண்டும் என்று பலரும் விரும்பினர்.

சர்க்கார், இப்போது மாநிலமெங்கணுமுள்ள நகர சபைகளுக்கான தேர்தல்களிலும் இந்தப் புதிய முறையையே தொடர்ந்து கடைப் பிடிக்கப் போவதாக அறிவித்திருக்கின்றனர்.

கடந்த ஆண்டு, புதிய வாக்குப் பதிவு முறைப்படி நடைபெற்ற மாவட்ட ஆட்சிமன்றத் தேர்தல்களில் கிடைத்த அனுபவத்தை சர்க்கார், இந்த நகர சபைத் தேர்தல்கள் நடைபெறுவதற்கான முறையை நிர்ணயித்தபோது, கவனத்தில் கொண்டார்களா? அப்படியானால், இந்தப் புதிய முறையில் உள்ள குறைபாடுகளை நீக்குவதற்கு அவர்கள் மேற்கொண்டிருக்கிற முயற்சிகள் என்ன, திருத்தங்கள் யாவை என்பதையும் தேர்தலில் அக்கரை கொண்ட மக்கள் கவனத்தில் கொண்டாக வேண்டும்.

சர்க்கார், இந்த ஆண்டு நகரசபைத் தேர்தல்களில் மேற்கொள்ளும் வாக்குச் சீட்டில் உள்ள சின்னத்தில் குறியிடும் வாக்குப் பதிவு முறையினால், மேலும் பெறக்கூடிய அனுபவங்களையும் ஏற்கனவே மாவட்ட ஆட்சிமன்றத் தேர்தலில் கிடைத்த அனுபவங்களையும் எதிர்காலத்திலேனும் வரப்போகும் பொதுத் தேர்தல்களுக்கான முறையை வகுக்கும்போது கவனத்தில் கொள்ள வேண்டுமென வலியுறுத்திச் சொல்கிறோம்.

மேலும், வாக்குப் பதிவு செய்துவிட்ட பிறகு வாக்காளர்களின் இடது கையில் 'அழியாத மை'யினால் குறியிடும் முறை குறித்து, பல கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டிருந்தாலுங்கூட, நடைபெறப் போகும் நகரசபைத் தேர்தல்களில் அந்த முறையைத் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும்.

சென்னை நகரசபையைப் பொறுத்தமட்டில் தொழிலாளர்களுக்கான தனித் தொகுதிகளில் வாக்களிக்கும் வாக்காளர்கள் இருமுறை வாக்களிக்க வேண்டியிருப்பதால், இடது கையில் இரண்டு இடங்களில், அழியாத மை குறிபோட அனுமதிக்க வேண்டும் என்று சர்க்கார் ஏற்பாடு செய்திருக்கின்றனர்.

இந்த ஏற்பாடு, 'தனித் தொகுதி—பொதுத் தொகுதி' என இரு இடங்கள் உள்ள எல்லா நகரசபைகளுக்கும் பொருந்தும் என்றே எண்ணுகிறோம்; அந்த முறையில், சென்னை நகரைப் போலவே இரு தொகுதிகள் உடைய எல்லா இடங்களிலும், இரண்டு முறை 'அழியாத மை' குறிபோட ஏற்பாடுகள் இது வரை இல்லாதிருக்குமானால், சென்னை நகரத்திற்கான விதி, இதர தொகுதிகளுக்கும் பொருந்துமாறு செய்யப்பட வேண்டும். இதை சர்க்கார் கவனிக்குமாக!

குல தெய்வத்திற்குக் குலக்கொடி பலி!

கடவுளின் கடுங் கோபத்திற்கு அஞ்சிய பக்திமான் செயல்!

பலானி பாட்ணு (ஒரிசா)—குல தெய்வத்திற்குத் தனது குலக் கொடியையே காணிக்கை கொடுத்த 'பக்திமான்' பற்றி செய்தி ஒன்று கிடைத்திருக்கிறது.

தனது குல தெய்வத்திற்குக் 'காணிக்கை' செலுத்துவதாக வேண்டியிருந்தானும், அவன்; அதற்காக, ஆடு ஒன்றையும் வளர்த்து வந்தான்; ஆனால், ஒரு நாள், அவனுக்குப் பணம் தேவைப்பட்டது; உடனே, ஆட்டை விற்றுப் பணம் பெற்று செலவு செய்துவிட்டான்.

குல தெய்வத்திற்குப் பலி தர வேண்டிய நாளும் நெருங்கியது; குறித்த நாளன்று 'காணிக்கை' தராவிட்டால், 'கடவுளின் கடுங் கோப'த்திற்கு ஆளாக நேரிடும் என்று அஞ்சிய அவன், அந்த நாளன்று, தனது எட்டு வயது மகனையே தெய்வத்திற்குப் பலியிட்டிருக்கிறான். எப்படி?

தன் மகனை தானே கொலை செய்து காணிக்கை செலுத்திய அவனுக்கு, மன நிம்மதி இல்லை போலும்; குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுத்ததாலோ என்னவோ, பத்து நாட்களுக்கு முன் அவன் தனது குடும்பத்தாருடன் ஊரை விட்டே புறப்பட்டிருக்கிறான்.

சந்தேகப்பட்ட ஊர் மக்கள், போலீசில் புகார் செய்திருக்கின்றனர்.

அவனை, ஜார்லிகோட் எனும் கிராமத்தில் போலீசார் கைது செய்து காவலில் வைத்திருக்கின்றனராம்.

இட்லரின் புதையல்!

ஆஸ்டிரியாவில் சால்ஸ்பர்க் அருகேயுள்ள ஒரு கிராமத்தைச் சேர்ந்தவர்கள், இட்லரின் புதையலைக் கண்டுபிடிப்பதில் முனைந்திருக்கிறார்களாம்!

இரண்டாவது யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில், இட்லரின் மலைவாச இடத்திலிருந்து வந்த ஒரு நாஜி விமானம், இந்தக் கிராமத்தின் அருகே உள்ள ஏரியில் விழுந்து முழுகியதாம்; கிராமவாசிகள், ஏரியில் மூழ்கி, அந்த விமானத்தை வெளியே கொண்டுவர முயற்சிக்கிறார்களாம்!

அந்த விமானத்தில் பல்லாயிரக் கணக்கான பவுன்கள் பெறுமானமுள்ள தங்கமும், பிளாட்டினமும் இருந்ததாக வதந்தி நிலவுகிறதாம்.

இந்தப் புதையல் சம்பந்தமாகக் கிராமவாசிகள் எதுவும் சொல்ல மறுக்கிறார்கள்; ஏனெனில், இப்பகுதியில் ஐந்து ஜெர்மானியரும், ஒரு பிரெஞ்சுக்காரரும் கடந்த 10 ஆண்டுகளில் கொலை செய்யப்பட்டனராம்.

இந்த மர்மக் கொலைகளுக்கும், புதையலுக்கும் சம்பந்தம் இருப்பதாகக் கிராமவாசிகள் அஞ்சுகின்றனராம்.

சந்தா செலுத்தும் சுகாதார திட்டத்துக்காக 1954—55-ம் ஆண்டில் இந்திய சர்க்காரால் வாங்கப்பட்ட மருந்து வகைகளின் மொத்தமதிப்பு ரூ 9,00,517-5-11 ஆகும்.

வடநாட்டில் மேலும் மூன்று எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகள்

பல கோடி ரூபாய் செலவில் தொழில் வளர்ச்சி ஏற்பாடு

சௌராஷ்டிரம், வங்கம், அசாம் பகுதிகள் பெறும் தொழில் வளர்ச்சி

அசாம், சௌராஷ்டிரம், மேற்கு வங்கம் ஆகிய இடங்களில் மேலும் 3 எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகளை ஏற்படுத்த இந்திய சர்க்கார் ஆலோசிப்பதாகக் கூறப்படுகிறது.

சௌராஷ்டிரத்தில் நிறுவப்படும் சுத்திகரிப்பு ஆலை பவாநகரில் அமைக்கப்படும்; அதற்கு சுமார் ரூ 20 கோடி செலவாகுமாம்; பிரெஞ்சு ஈரான் முனுக்க, நிதி உதவியுடன் ஒரு இந்திய கம்பெனி அதை அமைக்க முன்வந்திருக்கிறதாம்.

மேற்கு வங்கத்தில் நிறுவ உத்தேசிக்கப்படும் ஆலை, கல்கத்தாவுக்கு அருகில் இருக்குமாம்; அதை, ஸ்டான்டர்டு வாக்குவம் ஆயில் கம்பெனி ஏற்படுத்தும். வர்த்தகம் செய்யும் அளவுக்கு அங்கு எண்ணெய் கிடைக்குமானால், அந்த ஆலையை அமைப்பதற்கு அக்கம்பெனி விருப்பம் தெரிவித்திருக்கிறது.

3-வது சுத்திகரிப்பு ஆலை அசாமில் ஏற்படுத்தப்படலாம்; அசாமிலுள்ள திக்பாயில், ஏற்கனவே இப்போதுள்ள ஆலையில் 1960-க்குள் சுமார் 150 சதவிகிதமாக உற்பத்தி அதிகரிக்குமாதலால், அதைப் பரவலாக்க வேண்டும் என்றும், அல்லது, ஒரு புதிய ஆலையை ஏற்படுத்த வேண்டுமென்றும் கருதப்படுகிறதாம்; திக்பாயில் உற்பத்தியாகும் பண்டங்கள் அசாமுக்கு வெளியேதான் உபயோகிக்கப்படுவதாலும், போக்கு-வரத்து செலவுகளைக் கருதியும் புதிய ஆலையை அசாமில் ஏற்படுத்த அவ்வளவாக ஆதரவு இருக்காது எனக்கருதப்படுகிறதாம்.

உத்திரப் பிரதேசம், பீகாரில் அதை அமைக்க ஆதரவு தெரிவிக்கப்படலாம்.

இப்போது இந்தியாவில் 4 எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகள் உள்ளன; இவற்றில் மிகவும் பழைமையான திக்பாய் ஆலைதான்.

பம்பாய் அருகிலுள்ள டிராம்பேயில், 'ஸ்டாண்டர்டு வாக்குவம் ஆயில் கம்பெனியின் ஆலை 1954 ஜூலையில் வேலை செய்யத் துவங்கியது. பர்மா-ஷெல் ஆலை அதே இடத்தில் சென்ற மாதம் முதல் வேலை செய்ய ஆரம்பித்திருக்கிறது.

கால்டெக்ஸ் சுத்திகரிப்பு ஆலை, விசாகப்பட்டிணத்தில் 1957 ஆரம்பத்தில் வேலை செய்ய ஆரம்பித்துவிடும்; 1957 முடிவுக்குள் இந்த 4 ஆலைகளிலும் முழு அளவு உற்பத்தி ஆரம்பமானவுடன் சுமார் 40 இலட்சம் டன்னுக்குமேல் சுத்தி செய்யப்பட்ட பெட்ரோலியப் பொருள்கள் கிடைக்கும்.

ஆனல், அதற்குப் பிறகுகூட 1957-ல், சுமார் 9 இலட்சம் டன்னும், 1962-ல் 11 இலட்சம் டன்னும் பெட்ரோலியப் பொருள்களில் பற்றுக் குறை இருக்குமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது.

மோட்டார் பெட்ரோலும், மண்ணெண்ணெயும் 1957-ல், 'உபரியாக உற்பத்தியாகக் கூடுமாதலால் அவற்றை இந்தியா ஏற்றுமதி செய்யக்கூடிய நிலையில் இருக்குமெனவும் கூறப்படுகிறது.

மேலும் 1,500 அகாலி தளத்தவர் விடுதலை!

சாந்திகார், செப். 6—விசாரணைக் கைதிகளாயிருக்கும் அகாலிதளத்தவரில் மேலும் 1,500 பேர்களை, பஞ்சாப் சர்க்கார் விடுதலை செய்திருக்கின்றனர்.

மொத்தம் விடுவிக்கப்பட வேண்டிய 3,000 பேர்களில் இப்போது 1,500 பேர் விடுதலை பெறுகின்றனர்.

ஏற்கனவே பஞ்சாப் சர்க்கார், சுமார் 5,000 அகாலிதளத்தவரை மொழிவழி மாநிலக் கோரிக்கைக்காக ஒலி முழக்கம் எழுப்புவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை நீக்கியதை ஒட்டி விடுதலை செய்திருக்கின்றனர்.

இடம் பெயர்ந்தவர்களுக்காக 1954—55-ம் ஆண்டு வரை மொத்தம் ரூ 223.68 கோடி செலவழிக்கப்பட்டது; அதில் ரூ 153.39 கோடி மேற்குப் பாகிஸ்தானிலிருந்து இடம் பெயர்ந்து வந்தவர்களுக்கும், ரூ. 70.29 கோடி கிழக்கு பாகிஸ்தானிலிருந்து இடம் பெயர்ந்தவர்களுக்கும் செலவிடப்பட்டது.

அன்னியத் துணி இறக்குமதிக்கு எதிர்ப்பு

'லங்காஷயர் துணிகளையே வாங்குங்கள்' என்று இயக்கம்

பிரிட்டனில் தொழிலதிபர்கள் ஏற்பாடு

இங்கிலாந்தில், 'அன்னியத் துணிகளை மக்கள் வாங்கக்கூடாது—உள்நாட்டுத் துணிகளையே வாங்க வேண்டும்'—என்று தூண்டுவதற்காக, ஒரு இயக்கம் துவக்கப்பட்டிருக்கிறது

'லங்காஷயர் துணிகளையே வாங்குங்கள்' என்று மக்களைத் தூண்டுவதற்காக, லங்காஷயர் தொழிலதிபர்கள் ஒரு இயக்கம் ஆரம்பித்துள்ளனர் என்று தெரிகிறது.

லங்காஷயர் பருத்தித் துணிகளின் தரம் குறித்து பிரிட்டிஷ் மக்களின் கவனத்தைத் திருப்புவதற்காகவே இந்த இயக்கம் துவக்கப்பட்டிருக்கிறதாம்!

மேலும், பிரிட்டனில், ஏராளமான அளவு வெளிநாட்டுத் துணி இறக்குமதி அனுமதிக்கப்படுவதால் லங்காஷயர் நெசவு ஆலைகளுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியை சர்க்கார் உணரச் செய்வதற்கும் இந்த இயக்கம் பயன்படும் என்றும் கூறப்படுகிறது.

பிரிட்டனில், இந்தியத் துணிகளின் இறக்குமதி அதிகமாயிருக்கிறது என்பதும் குறிப்பிடத் தகுந்த ஒன்றாகும்.

இலங்கைவாழ் 'இந்தியர்'கள்

அதிகாரபூர்வமான அறிக்கை

'சென்ற ஆண்டு இறுதியில் இலங்கையிலுள்ள இந்தியர்களின் எண்ணிக்கை 8,31,000, என்று இலங்கை தொழில் கமிஷனர் வெளியிட்டுள்ள நிர்வாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இவர்களில் 2,29,290 பேர் ஆண்களும், 2,29,630 பேர் பெண்களும், இதரர்கள் குழந்தைகளும் என்று குறிப்பிடப்படுகிறது.

பிறப்பு விகிதம் ஆயிரத்திற்கு 29.6 என்றும், சாவு ஆயிரத்திற்கு 11 என்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது.

ஆந்திர மாநிலத்தில், கர்னூல் மாவட்டத்தில் உள்ள பண்யம் ரிசர்வ் காட்டிலும், குண்டூர் மாவட்டத்தைச் சேர்ந்த மாச்சேர்லாவிலும் புதிதாக இரண்டு சிமெண்டு தொழிற்சாலைகளை ஏற்படுத்த அனுமதியளிக்கப்பட்டிருக்கிறது.

பாங்கி விசாரணைக் குழு அறிக்கை

பத்திரிகைகளில் வெளிவந்தது பற்றி மக்கள் சபையில் கேள்வி

மந்திரியின் வருத்தம்

புதுடில்லி, செப். 5—

"பாங்கி ஊழியர் தகராறினைத் தீர்ப்பதற்காக நியமிக்கப்பட்ட விசாரணைக் குழுவின் அறிக்கை, மக்கள் சபையில் தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பாக அதில் சில பகுதிகள் பத்திரிகை ஒன்றில் பிரசுரமானது எப்படி என்று எனக்குத் தெரியாது; செய்தி எப்படி பத்திரிகைக்குக் கிடைத்தது என்பதை என்னுல் தெரிந்து கொள்ள முடியவில்லை; அதற்காக நான் வருந்துகிறேன்," என்று, மக்கள் சபையில் தொழிலாளர் மந்திரி கந்துபாய் தேசாய் தெரிவித்திருக்கிறார்.

மேலும் விசாரணைக் குழுவின் அறிக்கை, விசாரணை சம்பந்தப்பட்ட பலருக்கு அனுப்பப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

"மக்கள் சபை நடைமுறைகளை அனுசரித்து நடந்து கொள்ள வேண்டியது பத்திரிகைகளின் கடமையாகும்; மக்கள் சபை நடைமுறை மரபை பின்பற்றுவதற்கு உதவும் வகையில், பத்திரிகைகளும் அந்த நடைமுறையைப் பின்பற்றும் என்று நம்புகிறேன்"

என்று, சபைத் தலைவர் தெரிவித்திருக்கிறார்.

"இது பற்றி சர்க்கார் தரும் பதில் திருப்திகரமானதாக இல்லை; சர்க்காரின் விசாரணை கவனத்துடன் மேற்கொள்ளப்படவில்லை—அலட்சிய மனப்போக்குடன் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது; எனவே, செய்தி எப்படி வெளியேறியது என்பதைக் கண்டறிய ஒரு விசாரணைக் குழு, நியமிக்கப்பட வேண்டும்,"

என்று, எச். வி. காமத் என்ற உறுப்பினர், சபைத் தலைவரைக் கேட்டிருக்கிறார்.

"இந்தச் சம்பவம், சபையின் உரிமைகளில் குறுக்கிட்டதாகுமா என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியவில்லை; தெரிந்தால், இதனை உரிமைகள் குழுவிற்கு, விசாரணைக்காக அனுப்பியிருப்பேன்; மக்கள் சபை நடைமுறை மரபுகள் வளர வேண்டும்; அதற்கு, பத்திரிகைகள் உட்பட எல்லோரும் ஒத்துழைப்பது அவசியமாகும்,"

என்று, சபைத் தலைவர் பதில் தந்திருக்கிறார்.

விசித்திரமான பேரம்!

பணம் விரயமாகும் விபரீதம்!

சோடேபூர் கண்ணுடித் தொழிற்சாலையை விலைக்கு வாங்கிக் கொள்வதற்காக, ஜப்பான் நிறுவனம் ஒன்றிற்கு ரூ. 62 இலட்சம் கடன் வழங்க தொழில் நிதி 'கார்ப்பரேஷன்' தீர்மானித்திருக்கிறது

இந்தக் கடனை அந்த ஜப்பான் நிறுவனம் திரும்பத் தந்துவிடும் என்ற நம்பிக்கையிலேயே கடன் வழங்கப்பட்டுள்ளதாம்.

'அசாகி கண்ணுடிக் கம்பெனி' என்ற நிறுவனத்துடன் இதற்கான ஒப்பந்தம் நிறைவேறியுள்ளதாம்.

தொழில் நிதி 'கார்ப்பரேஷன்,' இந்தத் தொழிற்சாலையில் ரூ 1 10-கோடி மூலதனம் முடக்கியதும், பின் அதனை இந்த ஜப்பான் கம்பெனிக்கு 'சில' காரணங்களுக்காக விற்க முயன்றதும் நினைவிலிருக்கலாம்.

இந்த ஜப்பான் கம்பெனி, வரும் அக்டோபரில் வேலை துவங்கும் என்று தெரிகிறது.

1954-ம் ஆண்டில், மொத்தம் சுமார் ரூ 37 68 லட்சம் பெறுமானமுள்ள 64,41,000 பவுண்டு புகையிலை இந்தியாவிலிருந்து சீனுவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது.

'திராவிட வயலில் மேயும் வட நாட்டு எருமைகளை ஓட்டுவோம்'

புதுக்கோட்டையில் பொதுச்செயலாளர்

"வட நாட்டுக்காரன் உரிமையோடு சுரண்டுகிறுன்; இங்கிருக்கும் பணக்காரன் சுரண்டினுலும்கூட, வட நாட்டான், இந்நாட்டின் வளத்தையே கொண்டு போகப் பார்க்கிறுன். திராவிட வயலில் வட நாட்டு எருமைகளும், நமது எருமைகளும் மேய்கின்றன; இரண்டு எருமைகளையும் விரட்ட வேண்டுமென்றுலும் முதலில் விரட்டப்பட வேண்டியது அயலானுடையதே! ஏனெனில், பலன் அவனைச் சேர்கிறது. நமது எருமைகள் மேய்ந்தால் இனிமேல் மேயாவண்ணம் பூட்டுப் போட்டு பூட்டிக் காவல் செய்துவிட்டு, எருமையினிடம் இருக்கக்கூடிய பாலைக் கறந்துகொண்டுவிடலாம்; ஆனால், அயலானுடைய எருமையில் பால் கறக்க முடியுமா?

"தாய் மொழியே சரிவரத் தெரியாத நாட்டில் இந்தி ஏன்? சிங்களவ நாட்டில் கூடத் தமிழ்மொழி அரசியல் மொழியாக்கப்பட்டிருக்கிறது. வெளி நாட்டு அரசியல் தொடர்பு கொள்ள—வணிகத் தொடர்பு கொள்ள தமிழ் மொழியால் இப்பொழுது முடியாது; இந்தியால் மட்டும் முடியுமென்று கருதுகிறீர்கள்? இப்பொழுது இருக்கின்ற நிலையில் அகில உலகப் பொது மொழி ஆங்கிலம்தான்; வெளி நாட்டுத் தொடர்பு கொள்ள, தெலுங்கர்களுக்கு தெலுங்கு மொழியுடன் ஆங்கிலம் தேவைப்படுகிறது; மலையாளிகளுக்கு மலையாள மொழியுடன் ஆங்கிலம் தேவைப்படுகிறது; கன்னடியருக்குக் கன்னட மொழியுடன் ஆங்கிலம் தேவைப்படுகிறது; அதுபோலவே வட நாட்டானுக்கும் இந்தியுடன் ஆங்கிலம் தேவைப்படுகிறது; நமக்குத் தமிழ் மொழி போதாதா?

"இந்தியை வளர்ப்பதற்கு—பரப்புவதற்குச் செலவழித்துள்ள தொகையில் ஒரு பகுதியையாவது தமிழ் மொழியை வளர்க்கப் பயன்படுத்தினுர்களா? தமிழுக்காக எவ்வளவு செலவழித்துள்ளார்கள்? 'தமிழுக்காகப் பணத்தை ஒதுக்கு; ரா. பி. சேது, தேவநேயப் பாவாணர், டி. பி. மீனுட்சி சுந்தரம், கா. அப்பாதுரை முதலிய அறிவாளிகளை நியமித்து, இந்திக்குச் செலவழித்துள்ள தொகையில் ஒரு பகுதியை ஒதுக்கி, கலைச் சொற்களைக் கண்டு பிடியுங்களேன்,' என்று கூறினுல், தமிழ் எவ்வளவு விரைவில் வளர்ச்சிபெறும்?

"'மொழி வெறியர்களுக்குப் பைத்தியம் இவ்வளவு சீக்கிரமாகவா முற்ற வேண்டும்?' என்று, ஆச்சாரியார் கூறுகிறுர். இந்தி மொழியென்றுல், வட நாட்டில் எத்தனையோ இந்தி மொழிகள் இருக்கின்றன; வேர்ச் சொற்கள் அற்ற மொழி இந்தி; அது புதிய கலைச் சொற்களை உண்டாக்கிக் கொள்ள முடியுமா? பாரசீகம், சமஸ்கிருதம், உருது இவைகளிடம்தானே கடன் வாங்க வேண்டும்?

"தமிழில் வேர்ச் சொற்கள் ஏராளம்; தனக்கு வேண்டிய கலைச் சொற்களை உண்டாக்கிக்கொள்ள முடியும்; பிற மொழியின் துணை வேண்டியதில்லை; தனித்தியங்கவல்லது; ஆகவே, இத்தகைய காரணங்களால் திராவிடம் பிரிந்தாக வேண்டும்."

—என்று, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், 28—8—55-ல், புதுக்கோட்டை திலகர் திடலில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

****

தலைமைக் கழகம்: அறிக்கை—25/55

தி. மு. கழகமும் நகர சபைத் தேர்தலும்

ஸ்தல ஸ்தாபன தேர்தல்களில் அரசியல் கட்சிகள் போட்டியிட வேண்டிய அவசியமில்லை என்ற கொள்கையை ஒட்டி, வரும் நகரசபைத் தேர்தல்களில் தி மு. கழகம் கட்சி அடிப்படையில் பங்கு கொள்ளாது.

தி மு. கழகத்தைச் சார்ந்தவர்கள், கழகத்திற்கும், கழகக் கொள்கைகளுக்கும் களங்கம் ஏற்படாத வகையில், தனிப்பட்ட முறையில் வேண்டுமானுல் நகரசபைத் தேர்தலில் போட்டியிடலாம்.

தி. மு. கழகத்தின் மூலாதாரக் கொள்கைகளைப் பொறுத்து மாறுபட்ட கருத்துடைய எந்த அரசியல் கட்சியோடும் தி. மு. கழகத் தோழர்கள் இணைந்து நின்றோ அல்லது கூட்டாகச் சேர்ந்தோ தேர்தலில் போட்டியிடக் கூடாது.

தி. மு. கழகத் தோழர்கள் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் ஒரே இடத்தில் போட்டியிட முனைந்தால் அந்த இடத்திற்குரிய தி மு. கழகக் கிளை தலையிட்டுக் கழகத் தோழர்களுக்குள்ளே ஏற்படும் போட்டியைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கையை எடுத்துக்கொள்ள வேண்டும்.

தேர்தலில் போட்டியிடும் தி. மு. கழகத் தோழர்கள், கூடுமான வரையில், கூட்டணி போன்ற அமைப்புகளில் இணைவதைத் தவிர்த்துத் தனிப்பட்ட முறையில் போட்டியிட முயலல் வேண்டும்.

கட்சி ஆதிக்கத்தை எதிர்க்கக் கூட்டணி எங்கேயாவது அவசியப்படுமாயின், போட்டியிடும் தி. மு. கழகத் தோழர்கள், போதுமான விளக்கம் தந்து அதற்கான தலைமைக் கழகத்தின் அனுமதியைப் பெறலாம். கூட்டணி, தனிப்பட்ட முறையில் போட்டியிடுபவர்களின் கூட்டணியாக இருக்க வேண்டுமே ஒழிய, கட்சிகளின் கூட்டணியாக இருக்கக் கூடாது.

எந்தத் தி. மு. கழகக் கிளையும், 'தேர்தலில் யாருக்கு வாக்கு அளிப்பது' என்று முடிவு எடுக்கக் கூடாது. வாக்கு அளிப்பது என்பது, அவரவர்களின் தனிப்பட்ட விருப்பத்திற்கு விடப்பட வேண்டியதொன்றுகும். பொதுவாக, கட்சியின் பெயரால் போட்டியிடுபவர்களுக்கு ஆக்கந்தர வேண்டாம்.

தேர்தல் பணிகளில் ஈடுபடும் தி. மு. கழகத் தோழர்கள், கழகத்தின் கொள்கைகளுக்கு ஊறு ஏற்படாத வகையிலும், மேலே கூறப்பட்டவைகளுக்கு மாறுபடாத வகையிலும், தனிப்பட்ட முறையில் பணியாற்ற வேண்டும்.

"அறிவகம்," சென்னை 13-8-1955

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

****

செய்திச் சுருள்

செங்கற்பட்டு மாவட்ட தமிழாசிரியர் கழகம்

உறுப்பினர் பொதுக் கூட்டம்

3—9—55 பிற்பகல் 3 மணியளவில், வாலாஜாபாத் இந்து மத பாடசாலையில், தமிழாசிரியர் கழக உறுப்பினர் பொதுக்கூட்டம், திரு. மே வீ. வேணுகோபால் தலைமையில் நடைபெற்றது. திரு. மயிலை சிவமுத்து அவர்கள் 'தற்காலத் தமிழாசிரியர்களின் நிலை' குறித்துச் சொற்பொழிவாற்றினுர். திரு. பூ. ஆலாலசுந்தரம் அவர்கள், தமிழாசிரியர்கள் எல்லாத் துறைகளிலும் பயிற்சி பெறவேண்டிய அவசியத்தை விளக்கிக் கூறினுர். பின்னர் திருவாளர்கள் வே. இராமலிங்கம், சீநிவாசன், சு. இராசமாணிக்கம், த. சுப்பிரமணியம், ஆ. வீரபாகு, மா. வேதாசலனுர், காஞ்சி கிருஷ்ணவேணியம்மையார், வீ திருஞான சம்பந்தம், சு சாமராஜ், இராமகிருஷ்ணன், அழகுவேலன், தணிகை-அரசு ஆகியவர்கள் சொற்பொழிவாற்றினர்.

சென்னை மாநிலத் தமிழாசிரியர் கழகத்தினர் ஆராய்ந்து வெளியிட்டுள்ள சட்ட திட்டங்களை முழு மனதுடன் ஒப்புக்கொண்டு அதனை வெளியிட்ட குழுவினருக்கு நன்றி தெரிவித்தும், தமிழாசிரியர் கழகத்தில் அனைவரும் இரண்டு ரூபாய் செலுத்தி உறுப்பினராகப் பதிவு செய்து கொள்ள வேண்டுமெனவும், அடுத்த கூட்டம் காஞ்சியில் கூடி மாநாடு கூட்டுவது குறித்து ஆராய்வது எனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஈரோடு வியாபாரிகள் சங்கம்

6—8—55ல், திரு. ஆர். அய்யாசாமி, எஸ் ஆர். முத்துசாமி ஆகியோரை முறையே தலைவராகவும், செயலாளராகவும் கொண்ட தலைச்சுமை பாத்திரம், பேரீச்சம் பழ வியாபாரிகள் சங்கம் சர்க்காரால் பதிவு செய்யப்பட்டது.

சென்னை மாநிலத்திலேயே இத்தகைய ஒரு சங்கம் துவக்கப்பட்டது இதுவே முதன் முறையாகும்.

சங்க உறுப்பினர் கூட்டம்

26—8—55 மாலை 6 மணியளவில் நடைபெற்ற சங்க உறுப்பினர் கூட்டத்தில் கோவா கண்டன, அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தாளமுத்து—நடராசன் நினைவுப் படிப்பகம்

மதுரை, செப். 5—

30—6—55ல், மேற்படி படிப்பக உறுப்பினர்கள் கூட்டம், தோழர் கே இராஜாமணி தலைமையில் நடைபெற்றபோது, தோழர் கே. அயோத்தியைச் செயலாளராகக் கொண்ட நிர்வாக உறுப்பினர் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது. பின்னர், திராவிட நாட்டுப் பிரிவினை நாளை கொண்டாடுவதற்கான வேலைகளைக் கவனிக்க தோழர் எம். பாண்டி, பி. கார்மேகம் ஆகியோரை முறையே தலைவராகவும், செயலாளராகவும் கொண்ட குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

சமயநல்லூர் திராவிட மறுமலர்ச்சிப் படிப்பகம்

30-8-55 இரவு 9 மணிக்கு, செயலாளர் இல்லத்தில், மேற்படி படிப்பக உறுப்பினர்கள் கூட்டம் தோழர் சு. கருப்பணன் தலைமையில் நடைபெற்றபோது, படிப்பக வரவு - செலவுகள் ஒப்புக் கொள்ளப்பட்டும், தோழர் கா. வீரையா அவர்களைத் துணைச் செயலாளராகத் தேர்ந்தெடுத்தும், திராவிட நாடு பிரிவினை வாரத்தைத் துண்டு அறிக்கை வெளியிட்டுக் கொண்டாடுவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

திருமணம்

4—9—55 காலை 9-30 மணியளவில், சென்னை-திருவொற்றியூர், ஐரோடு, எண். 431, எக்ஸூர் சுப்பிரமணிய செட்டி திருமண மண்டபத்தில், தோழர் சி. வி. எம். அண்ணுமலை தலைமையில், தோழர் மா. வெ. நாராயணசாமி—தோழியர் செயலட்சுமி திருமணம் நடைபெற்றது. தோழர்கள் கே. எம். கண்ணபிரான், வரதராஜன், அ. பொன்னம்பலனுர், சி. வி. இராசகோபால் ஆகியோர் மணமக்களைப் பாராட்டிப் பேசிய பின்னர், அண்ணு அவர்கள் மணமக்களை வாழ்த்தியும், புரோகிதச் சடங்குகள் நீக்கிய திருமணத்தினுல் ஏற்படும் நன்மைகளை விளக்கியும் விரிவுரையாற்றினுர்.

இத்திருமண நினைவாக மணமக்கள் சார்பில் 'நம் நாடு' இதழுக்கு ரூ. 5 நன்கொடை தரப்பட்டது—பெற்றுக் கொண்டோம்—நன்றி—பொறுப்பாளர்.

திருத்தம்

30-8-55 (வெளியூர் 31-8-55)-ந் தேதி 'நம் நாடு' இதழ் மூன்றும் பக்கம் முதல் கலம் 6-வது பாராவில் 'இவ்வாறு அண்ணுதுரை அவர்கள் 25—8—55 மாலை 4½ மணியளவில் மதுரை தியாகராயர் கல்லூரி இளங்கோ மன்றச் சார்பில்......குறிப்பிட்டார்' என்றிருப்பதை, '......மதுரை தியாகராசர் கல்லூரி......' என்று திருத்திப் படித்துக்கொள்ளவும்.

அறிவிப்பு

"'தமிழ் நாடு எழுத்தாளர் மன்றம்' ஒன்றை நிறுவி, எழுத்தாளர்களை ஊக்கி, தமிழ்நாட்டிற்குப் பயன்படுத்தவும், தமிழை வளர்க்கவும் கருதி தொடங்குகின்றேன். பெருவாரியாக உறுப்பினர் சேர்த்து ஒத்துழைக்க வேண்டுகிறேன். உறுப்பினராகச் சேர விழைவோர் விண்ணப்பத் தாள் பெறுவதற்கு 30-9-55-க்குள் 4 அணு தபால் தலை அனுப்பவும்"

என்று மேற்படி மன்ற அமைச்சர் தோழர் ஏ நடேசன் அறிவிக்கிறுர்.

முகவரி:—தமிழ் நாடு எழுத்தாளர் மன்றம், பிள்ளையார் கோயில், தெரு, தண்டையார் பேட்டை, சென்னை - 21.

இந்தியா, ஆண்டொன்றுக்கு சுமார் ரூ. 20 கோடி பெறுமான முக்கிய அத்தியாவசிய எண்ணெய்களையும், எண்ணெய் வித்துக்களையும் ஏற்றுமதி செய்துவருகிறதாம்.

'கோவா விடுதலைக்கு சத்தியாக்கிரகம் முட்டுக்கட்டையாகும்'

பண்டித நேரு தரும் புதிய வியாக்கியானம்

புதுடில்லி, செப். 6—

"தனிப்பட்ட முறையிலோ, அல்லது கூட்டமாகவோ, கோவாவில் 'சத்தியாக்கிரகத்'தில் ஈடுபடுவது இப்போது நிலவும் சூழ்நிலைகளில் விரும்பத்தக்கதல்ல;

"தேசீய, அகில உலக, பொருளாதார, மற்றும் இதர சக்திகள் இயக்கங்கள் கோவா விடுதலைக்கான வேலைகளில் ஈடுபட்டிருக்கின்றன; கோவா விடுதலைப் பிரச்சினைக்கான பரிகாரம் அருகிலேயே உள்ளது; சீக்கிரமே அந்த இயக்கங்கள், கோவா பிரச்சினையை முழுவதுமாகத் தீர்த்துவைக்கவிருக்கின்றன; ஆனால், எப்போது இது நிகழும் என்று என்னால் சொல்ல இயலாது;

"ஒரு சர்க்கார், மற்றொரு சர்க்காருக்கு எதிராக 'சத்தியாக்கிரகத்'தில் ஈடுபட முடியாது; ஆனால், வேறு பல சமாதான வழிகள் இருக்கின்றன; பல வழிகளால் நாம் பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்; நாம், கடந்த ஆறு அல்லது எட்டு மாதங்களில் இந்த நடவடிக்கையை வெகுவாகவே மேற்கொண்டிருக்கிறோம்; பலன் கிடைக்க சில நாள் பிடிக்கலாம்;

"கோவாவில் சுரங்கங்களிலும், இரயில்வேக்களிலும் வேலை செய்கிற இந்தியர்கள் இருக்கின்றனர்; அவர்களெல்லோரும் இங்கு வர விரும்பினால் தாராளமாக வந்துவிட முடியும்; நாம் அவர்களை இங்கு வர அனுமதிப்போம்; அதேபோல, இங்குள்ள கோவாக்காரர்கள் அங்கு செல்ல விரும்பினால், அவர்களும் கோவா செல்ல அனுமதிக்கப்படுவார்கள்;

"சிலைகள் மூடப்பட்டிருப்பது மனிதர்களுக்கு மட்டுமின்றி, சாமான்கள், பொருள்களுக்கும்தான் என்பதையும் நினைவில்கொள்ள வேண்டுகிறேன்;

"ஒரு நாட்டு மக்கள் மற்றொரு நாட்டிற்கு எதிராக, சத்தியாக்கிரகத்தை ஒரு 'சர்வ தேச' ஆயுதமாக உபயோகிக்கும் பிரச்சினை பற்றி நான் குறிப்பிட விரும்பவில்லை;

"கோவாவில் இதுவரை நடந்தவை நடந்தவைகளாயிருக்கட்டும்; ஆனால், நாம் தொடர்ந்து அந்த வழிகளை ('சத்தியாக்கிரக' வழி) மேற்கொள்ளுவது, கோவா விடுதலைக்கு எந்த வகையாலும் வழி செய்யாது; மாறாக, கோவா விடுதலைக்கு முட்டுக்கட்டையாகவே இருக்கும்,"

—என்று, பிரதமர் பண்டித நேரு, வெளிநாட்டுக் கொள்கை பற்றிய விவாதம் ஒன்றினை, ராஜ்ய சபையில் துவக்கி வைக்கும்போது குறிப்பிட்டிருக்கிறார்.

விடுதலை ஆர்வம் கொண்ட குடும்பம்

கோவாவில் சிறைப்பட்டது!

சவந்தவாடி—

கோவா எல்லைக்குள்ளிருக்கும் ஒரு கிராமத்தைச் சேர்ந்த நான்கு பேரடங்கிய ஒரு குடும்பம் முழுவதும் 'கோவா விடுதலை'யை ஒட்டி சிறைவைக்கப்பட்டிருக்கின்றனர்.

ஒரு வயோதிகர், அவரது ஒரு பெண், இரு ஆண் பிள்ளைகள் ஆகிய நால்வரும் சிறைப்பட்டிருக்கின்றனர்.

சவைக்கார் என்ற அந்தப் பெண்மணி, கிராமத்தில் உள்ள ஆரம்பப் பள்ளியில் ஆசிரியையாகப் பணிபுரிபவர்; சென்ற ஆண்டு ஆகஸ்டு 15-ந் தேதியன்று அந்தப் பெண்மணி தனது பள்ளியருகே இந்திய தேசீயக்கொடியை ஏற்றி, மாணவக் குழந்தைகளை, கொடி வணக்கஞ் செலுத்தச் செய்திருக்கிறார்.

செய்தியறிந்த போலீசார், அவரைக் கைது செய்து, எச்சரித்து விடுவித்திருக்கின்றனர்; இந்த ஆண்டு ஆகஸ்டு 15-ந் தேதியன்றும் அந்தப் பெண்மணி இந்திய தேசீயக்கொடியை ஏற்றி மாணவர்களின் கொடி வணக்க அணிவகுப்பு நடத்தியிருக்கிறார்; உடனே போலீசார் அவரைக் கைது செய்து காவலில் வைத்தனர்; அவரை விடுவிப்பதற்காக போலீஸ் நிலையம் சென்ற அவரது வயோதிகத் தந்தையான பத்மாகர் சவைக்கார் என்பவரையும் போலீசார் சிறை வைத்தனராம்.

மக்களிடையே தூண்டுப் பிரசுரங்கள் விநியோகித்ததற்காக, சவைக்காரின் இரு மகன்களும் சிறைப்பட்டிருக்கின்றனர்.

'சகிக்க முடியாது'

அந்நிய ஆட்சி நீடிப்புக்கு எதிர்ப்பு காண்பிக்கிறார் நேரு!

புதுடில்லி, செப் 6—

"இந்திய மண்ணில், ஒரு அந்நிய காலனி அரசு நீடிப்பதை சகித்துக்கொண்டிருக்க இந்தியாவால் இனி இயலாது; கோவாவில் போர்ச்சுகீசியர் இருப்பதை கோவாக்காரர்களே விரும்பினாலும்கூட, இந்தியா, அந்நிலையை நீடிக்கத் தயாராக இல்லை,"

என்று, பிரதமர் நேரு ராஜ்யசபையில் நடைபெற்ற விவாதத்துக்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

காரணம் தெரியாத 'கலகம்'

15 தொழிலாளர்கள் கைது

தெஜ்பூர், செப். 5—

இங்குள்ள துலி தேயிலைத் தோட்டத்தில் ஏற்பட்ட காரணம் தெரியாத 'கலகம்' ஒன்றை ஒட்டி, சில பெண்கள் உட்பட 15 தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனராம்.

ஆர்ப்பாட்டம் நடைபெற்றபோது அங்கு அமைதியை நிலைநாட்டச் சென்ற போலீசார் மீது, பெண் தொழிலாளர்கள் கற்களை வீசியடித்ததாகக் கூறப்படுகிறது.

பின்னர், உதவி போலீஸ் அதிகாரி, தொழிற் சங்கத் தலைவர்களின் உதவியுடன் அமைதியை நிலைநாட்டினாராம்.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கான காரணம் இன்னும் தெரியவில்லை என்று கூறப்படுகிறது.

தி. மு. க. பொதுச்செயலாளர்

நெடுஞ்செழியன் இராசீபுரம் வருகை

11—9—55 காலை 9 மணிக்கு, இராசீபுரம் தி. மு. கழகச் சார்பில், மாநில மாநாட்டு நிதிக்காக, ரங்க விலாஸ் தியேட்டரில் சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டம், தோழர் ஜி. பி. சோமசுந்தரம் தலைமையில் நடைபெறும். பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன், தோழர் எம். ஜி. இராமச்சந்திரன் ஆகியோர் பேசுவர்.

மாலை 3 மணிக்கு, இராசீபுரம் நகராட்சி மன்றம், பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு வரவேற்பு அளிக்கும்.

மாலை 6 மணிக்கு, இராசீபுரம் புதுச்சந்தைப்பேட்டையில், தோழர் பி. ராமலிங்கம் தலைமையில், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு வரவேற்பு-பாராட்டுக் கூட்டம் நடைபெறும்.

மயிலை (சென்னை)யில் பொதுச்செயலாளர்

9—9—55 மாலை 6 மணிக்கு, சென்னை (மயிலாப்பூர்) 44-வது வட்ட தி. மு. கழக ஆறுவது ஆண்டு விழா, கோபதி நாராயணசாமி செட்டித் தெருவில் தோழர் முக்வை ஆர். எஸ். பாண்டியன் தலைமையில் நடைபெறும்.

தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

கழகக் கூட்டம்

★

அப்பமசமுத்திரம்

தி. மு. கழக துவக்க விழா

பள்ளியின் முன்னிலையில்

8—9—55 மாலை 6 மணிக்கு

தலைவர்: எம். பி. சுப்பிரமணியம் எம்.எல்.ஏ.

கொடியேற்றுபவர்: என். கே. இராசு

துவக்குபவர்: சிற்றுளி சுப்பிரமணியம்

சென்னை 34-வது வட்ட தி. மு. கழகச் செயற் குழு உறுப்பினர்கட்கு

7—9—55 இரவு 8 மணிக்கு, சென்னை 34-வது வட்ட தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டம், கழகப் பணிமனையில் (எண் 29, ராமா நாயக்கன் தெரு, நுங்கம்பாக்கம்) நடைபெறும்.

புரட்சித் தலைவர்

மன்னரைப் பேட்டி காண ஆவல்!

காட்மண்டு, செப். 6—

தான், இனி அரசரிடம் விசுவாசம் காட்டுவதாகவும், அரசரைப் பார்க்க வேண்டுமென்று கோரியும், கைது செய்யப்பட்டுள்ள நேபாளப் புரட்சித் தலைவர் டாக்டர் கே. ஐ. சிங், நேபாள மன்னர் மகேந்திராவிற்கு மனுச் செய்துகொண்டிருப்பதாகத் தெரியவருகிறது.

தன்னை என்ன வேண்டுமானாலும் மன்னர் செய்துகொள்ளலாம்' என்று, தலைநகருக்குக் கொண்டு வரப்படும் அந்த புரட்சித் தலைவர் கூறியிருக்கிறாராம்.

'தென் மாநிலம் அமைய வேண்டும்'

'கேரள மாநிலம் வேண்டாம்!'

மலையாள காங்கிரசின் தீர்மானம்

கோழிக்கோடு, செப். 5—

ஒரு கேரள மாநிலம் அமைவதை எதிர்த்தும், திரு-கொச்சி, கூர்ஜரம், சென்னை ஆகிய மாநிலங்களை ஒன்றாக இணைத்து ஒரு 'தென் மாநிலம்' அமைப்பதை வரவேற்றும், மலையாள பிரதேச காங்கிரஸ் குழு, தீர்மானம் ஒன்று நிறைவேற்றியிருக்கிறது.

'பொதுவாக தென்னாட்டு மக்களுடையவும், குறிப்பாக மலபார் மக்களுடையவும் நலன் கருதி திரு-கொச்சி, கூர்ஜரம், சென்னை ஆகிய மாநிலங்களடங்கிய ஒரு தென் மாநிலம் அமைக்கப்பட வேண்டும்,"

என்று, கடந்த 1953 மே 23-ந் தேதியன்று பாலக்காட்டில் நடைபெற்ற பிரதேச காங்கிரஸ் மாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட முடிவை வலியுறுத்தி, தீர்மானம் ஒன்றை பிரதேச காங்கிரஸ் செயற் குழு கடந்த 3-ந் தேதியன்று நிறைவேற்றியுள்ளதாம்.

ஐதராபாத் மாநிலம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் பேசுகையில், 'விசால ஆந்திரத்தின் தலைநகர் ஐதராபாத் நகரமாகத்தான் இருக்கும்' என்றும் தெரிவித்திருக்கிறார்.

"மாநில புனரமைப்புக் குழுவினர், இந்தியாவில் சுமார் 16 அல்லது 17 மாநிலங்கள் அமையுமாறு சிபாரிசு செய்யக் கூடும்; சிறிய, சிறிய மாநிலங்கள் எல்லாம், அழிக்கப்பட்டுவிடும்,"

என்று, தான் நம்புவதாகவும் தெரிவித்திருக்கிறார்.

புல மொழி பேசும் மக்கள் கொண்ட ஐதராபாத் மாநிலம் துண்டாடப்பட வேண்டும் என்ற கருத்து தனக்கு உடன்பாடானதுதான் என்றும், ஏனெனில், ஐதராபாத் மாநில உருவமே சந்தர்ப்பவசமாக நிகழ்ந்த ஒன்றுதான் என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

'மக்கள், மாநில புனரமைப்புக் குழுவின் சிபாரிசுகளை, கசப்பேதுமின்றி, முழுமனதுடன் ஏற்றுக் கொள்ளவேண்டும்,' என்றும் அவர் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

திரு-கோச்சியிலிருந்து இமயம் வரை இந்தியா ஒன்றுதான் என்றும், முதலில் மக்கள் எல்லோரும் தங்களை 'இந்தியர்'கள் என்று கருதவேண்டும் என்றும், வழக்கமாக வடநாட்டுத் தலைவர்கள் இசைக்கும் 'ஒற்றுமை' கீதத்தையும் கோபாலர், மாணவர்களிடையே இசைக்கத் தவறவில்லை.

"நாடெங்கிலும் வாழும் ஆந்திரர்கள், தெலுங்கு கலாச்சாரத்தைப் போற்றி வளர்ப்பதற்குப் பாடுபடவேண்டும்," என்றும், கோபாலர் வேண்டுகோள் விடுக்கத் தவறவில்லை.

சென்னை துறைமுக 'டிரஸ்ட்' ஊழியர்கள்

வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவர்?

சென்னை, செப். 7—

"சென்னை துறைமுக 'டிரஸ்ட்' ஊழியர் சங்கத்தவர், தங்கள் கோரிக்கைகளுக்கு நிர்வாகத்தினர் தந்த பதில் திருப்திகரமாக இல்லையென்று கருதுவதால், சங்கத்தலைவர் சரியென்று கருதும்போது வேலை நிறுத்தத்தில் ஈடுபடவேண்டும்—என்று, கடந்த 5-ந் தேதியன்று தோழர் எஸ். சி. சி. அந்தோணி தலைமையில் நடைபெற்ற பொது உறுப்பினர் கூட்டத்தில் முடிவு செய்திருக்கின்றனர்,"

என்று சங்கப் பொதுச் செயலாளர் சாம்பசிவம் அறிவித்திருக்கிறார்.

எதிர்பார்த்த......

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

மற்றொரு கேள்விக்குப் பதிலளிக்கையில், செய்திப் போக்குவரத்து மந்திரி ஜெகஜீவன்ராம் சொன்னார்:—

"தபால்—தந்தி இலாகா ஊழியர்கள் ஒரிடத்திலிருந்து மற்றொரு வட்டாரத்திற்கு மாற்றப்படக் கூடியவர்கள்; எனவே, அவர்கள், அந்தந்த வட்ட மொழிகளைத் தெரிந்துகொள்ள வேண்டுவது அவசியம்;

"பல மாநிலங்களின் மொழியாக இந்தி மொழி இருக்கப் போவதால், அந்த மொழியில் வேலை செய்யும் அறிவுபெற்றவர்களாக தபால்—தந்தி இலாகா ஊழியர்கள் இருந்தாகவேண்டும்.

'நேசமற்ற முறை இடையூறாகும்'

பண்டிதர் வருந்துகிறார்

"வேண்டுமென்றே, கடுமையான போக்கில் சவால் விடும் வார்த்தைகளைப் பிரயோகித்து, இந்தியாவைத் தாக்கி பாகிஸ்தான் பத்திரிகைகள் மீண்டும் எழுதுவது வருந்தத்தக்கதேயாகும்; ஒருபுறம் நேச முறையிலும் மறுபுறம் நேசமற்ற முறையிலும் நடந்துகொள்வது சங்கடமானதேயாகும்; இப்போக்கு நேசமான சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு உதவாது; ஏற்பட்டுள்ள பிரச்சினைகளைப் பரிசீலிக்கவும், முடிவு காணவும் இடையூறாகவே இருந்துவரும்,"

என்று, பிரதமர் நேரு, ராஜ்யக்கள் சபையில் குறிப்பிட்டுள்ளார்.

இரகசியமாம்;

வெளியிட முடியாதாம்!

"இலங்கை இந்தியர் குடியுரிமைப் பிரச்சினை சம்பந்தமாக இந்தியப் பிரதமரிடமிருந்து ஏதாவது கடிதம் வந்திருக்கிறதா? அதில் என்ன எழுதப்பட்டிருக்கிறது?"

என்று, இலங்கைப் பார்லிமெண்டில் எழுப்பப்பட்ட ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில், பிரதமர் கொத்தலாவலை குறிப்பிட்டதாவது:—

"அக்கடிதம் இரகசியமாகப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது; இக்கட்டத்தில், அதுபற்றிய விவரங்களை வெளியிட முடியாது; குறித்தத் தருணத்தில், அது பற்றிய விவரங்கள் சபைக்குத் தெரிவிக்கப்படும்."

திருமணம்

9—9—55 காலை 9½ மணிக்கு, மணப்பாறை, மணமகன் இல்லத்தில், தோழர் மதிவாணன்—தோழியர் தமிழரசி திருமணம், தோழர் டி. கே. தாமரைச்செல்வன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் இளமுருகு, காசிநாதன், ரெ. திருமலைசாமி, தோழியர் பொற்செல்வி ஆகியோர் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.

தி.மு.க. ஏழாவது ஆண்டுவிழா கொண்டாடுவீர்